මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE






***ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/64*** ***2025.04.22***

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல் – 2025.05.06
## வாக்கை அடையாளமிடும் செயற்பாடுகள்

***2025.05.06* ஆந் திகதி நடாத்தப்படவுள்ள உள்ளூரதிகார சபைகள் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்குமான அறிவித்தல்**

- ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மாத்திரமே உரித்தாகும். அதாவது ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்குச் சீட்டு மாத்திரமே விநியோகிக்கப்படும்.
- இத்தேர்தலின்போது வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டில் போட்டியிடுகின்ற கட்சிகளின் பெயர்களும், சின்னங்களும், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவதாயின், சுயேச்சைக் குழுவொன்றின் சொற்றொடரோடு அடையாளம் காட்டும் இலக்கம் மற்றும் சின்னம் மாத்திரமே அச்சிடப்பட்டிருக்கும். வேட்பாளர்களின் அல்லது வட்டாரங்களின் பெயர்கள் அல்லது இலக்கங்கள் அதில் குறிப்பிடப்பட மாட்டாது.

**வாக்குச் சீட்டின் மாதிரி**

| | | |
|---|---|---|
| **“அ” கட்சி** |  | |
| **“ஆ” கட்சி** |  | |
| **“இ” கட்சி** |  | |
| **சுயேச்சைக் குழு *1*** |  | |
| **சுயேச்சைக் குழு *2*** |  | |

- வாக்கினை அளிக்கும் போது உங்களுக்கு விருப்பமான கட்சியின் பெயர், சின்னம் அல்லது சுயேச்சைக் குழுவின் சொற்றொடருடன் அடையாளம் காட்டும் இலக்கம் மற்றும் சின்னம் உள்ள நிரலுக்கு வலப்புறமாகவும். சின்னத்திற்கு முன்னாலும் உள்ள வெற்றுக் கூட்டில் ஒரேயொரு ( X ) புள்ளடியை மாத்திரம் இட்டு அடையாளமிடுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.
- வாக்குச் சீட்டில் வேறெந்த சின்னத்தையும் இடுதல், வரைதல் அல்லது எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும். ஏனெனில் அவ்வாறு செய்தல் அதாவது பல்வேறு அடையாளங்களை வரைதல், அடையாளமிடல் போன்றன வாக்காளரை இனங்காணச் செய்யும் முயற்சியாகக் கருதப்பட முடியும் என்பதனாலாகும்.

**வாக்களிப்பதற்காக ஒரேயொரு புள்ளடியை ( X ) மாத்திரம் பயன்படுத்துங்கள்.**

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

***சமன் ஸ்ரீ ரத்நாயக்க***
***தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்***